# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக மாணவரணி நேர்காணல்!

## தமிழ் கா.அமுதரசன்,சேலம் இரா.தமிழ்ச்செல்வன், ஈரோடு வீரமணி பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி, செப். 26-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக மாணவர் அணி சார்பில் ஒன்றிய, நகர,பேரூர் கழகங்களுக்கான மாணவரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல் மாவட்டக் கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது,இதில் கழக மாநில மாணவரணி துணை செயலாளர் தமிழ் கா.அமுதரசன்,சேலம் இரா.தமிழரசன், ஈரோடு வீரமணி ஆகியோர் பங்கேற்று நேர்காணலை நடத்தினர்.

தமிழ்நாடு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்,கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக மாநில மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி எழிலரசன் எம்.எல்.ஏ. ஆகியோர் அறிவிப்பிற்கிணங்கவும், பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சரும், மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சருமான எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதய சூரியன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கி நேர்காணலை துவக்கி வைத்து பேசுகையில், தமிழ் மாணவர் மன்றம் விரைவில் தொடங்குவது குறித்தும், மாணவரணி கழக ஆக்கப் பணிகள் குறித்தும்,நமது திராவிட மாடல் அரசு மாணவர்களுக்கு செய்து வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் மாணவர்களிடத்தில் எடுத்து கூறி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சையத் நிஜாம் நேர்காணலுக்கு வந்த அனைவரையும் வரவேற்றார், இதில் மாநில மகளிர் அணி துணை செயலாளர் ஆ.அங்கயற்கண்ணி மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு,பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள்,இளைஞர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் குருராஜ்,கதிரவன், பார்த்திபன் மணிகண்டன், பொன்னி ஆகியோர் நன்றி கூறினார்கள்.

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில்

# ‘கலைஞர் 100’ வினாடி வினா - மாணவ - மாணவிகள் பங்கேற்பீர்!

## நா.கார்த்திக் - தொ.அ.ரவி - தளபதி முருகேசன் அறிக்கை!





கோவை, செப். 26 -

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. சார்பில், “கலைஞர் 100 “வினாடி வினா கல்லூரி மாணவிகள், கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, கழக அனைத்து நிர்வாகிகள் பங்கேற்பீர் என கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

அவர்களது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. அறிவுறுத்தல் படி,

தமிழ்நாடு வீட்டு வசதித் துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்து சாமி வழிகாட்டுதலில்,

நாளை (27.09.2024 - வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணி அளவில், வரதராஜபுரம் சாய் விவாஹா திருமண மண்டபத்தில் “கலைஞர் 100 “வினாடி வினா” நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், கழக மகளிரணி செயலாளர் ஹெலன் டேவிட்சன்,கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டரணி மாநில துணைச் செயலாளர் மாலதி, கழக பிரச்சாரக்குழு செயலாளர் உமாமகேஸ்வரி,கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகளும் மற்றும் தலைமைக்கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நிர்வாகிகள், துணை மேயர், மாவட்ட, மகளிரணி,மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதுசமயம் இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக் கழக,பேரூர்க்கழக, வட்டக் கழகச் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகரக் கழக, ஒன்றியக் கழக, பகுதிக்கழக, பேரூர்க் கழக, வட்டக்கழக நிர்வாகிகள், BLA-2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் நா.கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.





